வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# விளாங்கோம்பை பழங்குடி மலைவாழ் மக்களின் சிறுதெய்வ வழிபாடு

**கு.கதிர்வேல்**

தமிழ் இலக்கியம் மூன்றாம் ஆண்டு காமதேனு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சத்தியமங்கலம்
ஈரோடு மாவட்டம்
Kathirvelk.ta22@kascsathy.ac.in

ஆய்வுச்சுருக்கம்:

பண்டைய கால மலைவாழ் மக்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானதைத் தரும் கடவுளுக்கு நன்றி செலுத்தும் பழக்கம் கொண்வராக இருந்தனர். இறைவழிபாடு என்பது அம்மகளிடம் வாழ்வோடு கலந்திருந்தது. அவர்களின் வாழ்வியல் பண்பு என்பது உயர்ந்த மரபுகளைக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. இவர்களிடத்தில் தெய்வ நம்பிக்கை, வழிபாடு போன்றவை உயர்ந்த பண்பாகவும் கருதப்படுகிறது. சிறுதெய்வ வழிபாடு பெரும்பாலும் நாட்டுப்புறத்தைச் சார்ந்த மக்கள் வழிபடும் முறை ஆகும். நாட்டுப்புற மக்களுக்கு நம்பிக்கை என்பது மூன்றாவது கை என்றும் கூறப்படுகிறது. சிறுதெய்வம் வழிபடும் முறைகளுக்கு இவர்கள் விதிமுறைகள்,சடங்குகள், வழிபாடுகள் போன்றவற்றை மேற்க்கொண்டும் வருகின்றன. இம்மக்கள் இந்த சிறுதெய்வ வழிபாடு முறையை ஆண்டிற்கு ஒரு முறை வைத்துள்ளனர். இதில் இன குழுக்களும், பிரிவுகளும் என்று பிரித்து வைக்கப்பட்டு வருகின்றன. இங்கு ஒரு குறிப்பிட்ட பகுதியான விலங்கு சிறு தெய்வத்தில் ஒன்றான பூந்தல் மாரியம்மன் பற்றி இவ்வாய்வு கூறப்படுகிறது.

முன்னுரை :

இந்த உலகில் உள்ள மக்கள் பல்வேறு சமயங்களையும், சடங்குகளையும் பின்பற்றுகிறார்கள். வெவ்வேறான பழக்க வழக்கங்களையும், கலாச்சாரத்தையும் கொண்டிருக்கிறார்காள். மதங்களால் அவர்கள் பிரிக்கப்பட்டாலும் மனிதனாக அவர்கள் அனைவரும் ஒன்றுதான் என்பதை மறந்து வாழ்கிறார்கள். இவ்வுலகம் பல உயிர்களின் தோட்டம். மனித பூக்கள் அதில் ஏராளம். இவ்வுலகில் ஒரு வகையான பூக்கள் மட்டுமில்லை பல வகையானவை உண்டு. இனம் ஒன்றுதான் ஆனால் இவர்கள்தான் அதனை இன முறைகளில் பிரித்து உள்ளனர்.மேலும் இப்பிரிவு நாட்டுப்புறப்பகுதியில் அதிகம் உண்டு.

இப்பிரிவுகளுக்கு ஏற்ப சிறுதெய்வ வழிபாடும் வைத்துள்ளனர். பல்வேறு கலாச்சாரங்களில் சிறு தெய்வங்களின் வரையறை அதன் சடங்கு முறை, வழிபாடு போன்றவை முக்கியத்துவம் பெற்றுள்ளன. இவர்கள் சிறு தெய்வங்களை நம்புவதன் காரணம் நல்ல விளைச்சல், நல்லறிவு, பாதுகாப்பு போன்றவை ஆகும். இந்த முறையில் விளங்கோம்பை பூந்தல் மாரியம்மன் சிறு தெய்வ வழிபாடு பற்றி காணலாம்.

பழங்குடி மலைவாழ் மக்கள்:

பழங்குடி மலைவாழ் மக்கள் என்பவர்கள் தொன்று தொட்டு பன்னெடுங்காலமாகவ ஒரு நிலப்பகுதியில் தங்கி வாழ்பவர்கள். இவர்கள் தங்களுக்கு என தனிப்பழக்க வழக்கங்களும்,மொழியும், நிலமும், அடிப்படையும் கொண்டு இருப்பவர்கள். செடி,கொடி,மரம், விலங்கு போன்றவற்றைக் கொண்டு தங்கள் வாழ்க்கையை தன்நிறைவோடு வாழ்பவர்கள். தங்களுக்குக்கெனத் தனிக் கலைகளும்,கடவுள்களும்,வழிபாடுகளும், சடங்கு முறைகளும் மேற்கொள்பவர்கள்.பழங்குடிகள் பெரும்பாலும் “காடும் காடு சார்ந்த நிலப் பகுதியில்” இருப்பவர்கள். இவர்கள் மலைக்குறவன்,மலை வேடன், மலையாளி என்று அழைக்கப்படுகின்றன.

இம்முறையில் தமிழ்நாடு மக்கள் கணக்கெடுப்பு படி பழங்குடிகள் 3.5% உள்ளனர் .மேலும் 30 மாவட்டங்களில் 40 பிரிவுகளில் பழங்குடிகள் உண்டு என கூறப்படுகிறது. இவர்கள் பணம் சார்ந்த பொருளாதாரத்தை அதிகம் பயன்படுத்துவதில்லை. மேலும் அதற்கு பதில் தங்களின் தேவைகளை அவர்களை பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

நாட்டுப்புற தெய்வ வழிபாடுகள் முறை:

கடலோடு கலக்கும் ஆறுகள் போல் எல்லா தெய்வ வணக்கமும் என்னையே அடைகிறது என்று கண்ணபிரான் சொன்னது உண்டு. ஆறுகளை கூட எண்ணிவிடலாம் ஆனால் தெய்வங்களையும் நம்பிக்கைகளையும்,வழிபாடுகளையும் எண்ணுவது என்பது அரிதானது. தெய்வ வணக்கத்திற்கு காரணம் அச்சமும்,அன்பும், கலைக்களஞ்சியம் கூறுவது போன்று.ஆதிக்குடிகள் இயற்கையில் காணும் இடி ,மின்னல் ,பெருமழை ,பூகம்பம் போன்ற அச்சத்திற்கும் நிகழ்ச்சிகளுக்கும் நோய்களுக்கும் காரணம் உலகின் கண் உலவும் கணக்கற்ற ஆவிகளை என்று நம்பி இருந்தால் அந்த ஆவிகளின் சினத்தை தணிக்க அவற்றை தேவதைகளாக கொண்டு வழிபட்டனர்.

“கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்”

என்பது ஒரு முதுமை மொழி ஆனால் இன்று கோயில் இல்லா ஊர்கள் இல்லை என்பது மட்டுமல்ல குடி இல்லா ஊர்களில் கூட கோவில் இருக்கின்றன .மனித மனம் “ஒரு மரமற்ற கொடி” அது தன்னால் நிமிர்ந்து நிற்க முடியாது. எனவே கடவுள், தலைவர் போன்ற ஏதாவது

ஒரு வழிபாட்டின் முதுகில் ஏறி கொள்வது, அஞ்சுவது தொன்று தொட்டு இன்று வரை இயல்பாகிவிட்டது.

நாட்டுப்புற தெய்வ வழிபாட்டின் இயல்புகள்:

1.பெரும்பாலும் பெண் தேவதைகளை வழிபடப் பெறும் ஆர்ப்பாட்டவை அண்டத்தைப் பற்றிய தத்துவார்த்தங்களோடு தொடர்பு கொள்ளாமல் கிராம வாழ்வோடு தொடர்பு கொண்டவை

2.குடும்பத்தில் அல்லது குளத்தில் இருந்தோர் கொலை செய்யப்பட்டோர்,ஆவிகள், மூத்தோர், கன்னிகள் போன்றோரும் மரங்கள், கற்கள், ஆயுதங்கள் போன்றவற்றையும் தெய்வங்களாக வழிபடுதல்.

3.கோயில்கள் மரத்தடி,குளங்கரை,இடுகாடு,ஏரி, கண்மை போன்ற இடங்களில் இடம்பெறும்.

4.குடும்பத்துள் மூத்தவர் பிராமணர் அல்லாத ஒசகன்,பண்டாரன்,வேலர்,அவசந்தி, பெரியோர்கள் போன்றவர்கள் பூசாரிகளாக அமைவார் .

5.விழாக்கள் செய்ய குடும்ப குல சாதிய ஊர் அமைப்புகள் இருக்கும் .ஆண்டுக்கு ஒரு முறை அல்லது சில ஆண்டுக்கு ஒரு முறை பொருளாதார செழிப்பிற்கு வழிபாடு நடைபெறும் உயிர் பலிகள் இருக்கும்.

நாட்டுப்புற தெய்வம் நம்பிக்கை:

நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் தெய்வ வழிபாடு முக்கிய கூறாகும். அவர்கள் வாழ்வின் எந்தவித நிகழ்ச்சிக்கும் முதலில் தெய்வ வழிபாடு முன்னிற்கும். சிறு தெய்வ வழிபாட்டில் திருவிழா,கலை,பண்பாடு, நம்பிக்கை, பழக்கவழக்கம் போன்றவை நாட்டுப்புற கூறுகள் உள்ளன. நாட்டுப்புற தெய்வங்கள் காரணமாக கும்மி,கோலாட்டம்,குறவஞ்சி, வில்லுப்பாட்டு போன்ற பலவிதமான நாட்டுப்புற இலக்கியங்களில் தோற்றம் வளர்ந்துள்ளன .நாட்டுப்புற மக்கள் பல்லி சகுனத்தை பெருவழக்கில் கருதுகின்றன. பல்லி எந்த திசையிலிருந்து ஒலி எழுப்புகிறது மனித உடலில் எப்பகுதியில் விழுகிறது என்ற அடிப்படையில் பல்லி சகுனம் குறித்த பலன் தீர்மானிக்கப்படுகிறது.இவ்வாறு நாட்டுப்புற தெய்வ நம்பிக்கைகளில் இவைகள் எல்லாம் காணப்படுகின்றன.

சிறு தெய்வங்கள்:

நாட்டுப்புற மக்களால் தொன்றுத்தொட்டு வழிபட்டு வரும் கிராம தெய்வங்களை சிறுதெய்வங்கள் ஆகும்.இவை நாட்டுப்புற மக்களின் காவல் தெய்வங்களாக நோய் நீக்கி நலம் தருபவையாக வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பாவையாக கருதி வணங்கப்படுகின்றன.தெய்வங்கள் பரந்துபட்ட தொடர்பில்லாமல் கிராமங்களிலேயே இருப்பிடமாக கொண்டு நாட்டுப்புற

மக்களின் மரப்போடு நீங்காத உறவு கொண்டு விளங்குகின்றன. “வணங்கினால் நன்மையும் வணங்காவிட்டால் தீமையும் பயப்பட” என்ற ஆழ்ந்த நம்பிக்கை காரணமாக பாமர மக்களால் இவை வழங்கப்பட்டு வருகின்றன .

சிறு தெய்வங்களில் இரண்டு பிரிவுகள் உண்டு. அவை;

1.ஆண் தெய்வங்கள்

2.பெண் தெய்வங்கள்

ஆண் தெய்வங்கள் முன்மை தெய்வம், துணை தெய்வம் என்று இரு பிரிவைக் கொண்டது. பெண் தெய்வங்கள் தாய் தெய்வம், கன்னி தெய்வம் என்று இரு பிரிவைக் கொண்டது.

அறிஞர்கள் கண்டறிந்தபடி ஐந்து வகையாக சிறு தெய்வங்களை பிரித்தனர்.

சிறு தெய்வங்கள்

1.வீட்டு தெய்வம்

2.குலதெய்வம்

3.இன தெய்வம்

4.ஊர் தெய்வம்

5.வெகுசன தெய்வம்

என்று பிரிக்கப்பட்டுள்ளன.

வீட்டு தெய்வம்: வீட்டுச்சாமி, கன்னித்தெய்வம்.

குலதெய்வம்: குடும்ப தெய்வம்

இன தெய்வம்: பொது தெய்வம்

ஊர் தெய்வம்: காவல் தெய்வம்

வெகுசன தெய்வம்:மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி, கோட்டை மாரியம்மன்

சிறு தெய்வம் தோற்றம் பெறும் முறை:

சிறு தெய்வம் பெரும்பாலும் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கை அடிப்படையில் தோற்றம் பெறுகின்றன. சிறு தெய்வங்கள் எல்லாம் ஒரே முறையில் தோற்றம் பெறுவதில்லை.பல்வேறு காரண காரிய அடிப்படையில் தோற்றம் பெறுகின்றன. இதனை நான்கு வகைகளில் அடைக்கலம்.

1.குறிப்பிட்ட ஊரில் குறிப்பிட்ட வட்டாரத்தில் பிரிந்து இறந்ததன் அடிப்படையில் தோற்றம் பெறுதல் ஒரு முறை.

2.கண்டெடுப்பு முறைகளில் தோற்றம் பெற்றவை.

3.மக்கள் ஓரத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு புலம் பெயர்ந்த நிலையில் தனது பூர்வீக தெய்வ கோயிலில் இருந்து பிடி மண்ணை எடுத்து வந்து அதனை தோற்றம் அளித்து வழிபடுவது.

4.பாதுகாப்பு முறைகளுக்கு என்று தோற்றம் பெற்றவை.

விளாங்கோம்பை பூந்தல் மாரியம்மன் வழிபாடு:

விளாங்கோம்பை என்பது மலைவாழ் பழங்குடிகள் வாழும் பகுதி. இங்கு ஒரு குறிப்பிட்ட இன மக்கள் வாழ்கின்றன.இவர்களுக்கு காடுமலையும் தான் உணவளிக்கிறது. இம் மக்கள் கள ஆய்வு மேற்கொண்ட போது அவர்கள் கூறுவது “காடுமலையும் எங்களது சொந்தம்” எங்களின் மூதாதையரின் மூச்சுக்காற்று இந்த காடு மலைகளில் தான் இருக்கிறது .நாங்கள் இந்த பகுதிக்கு வந்த காலம் முதல் இன்று வரை எங்களிடம் சிறுதெய்வ வழிபாடு உண்டு. எங்களின் சிறு தெய்வங்கள் இரண்டு வகை. அவை;

1.ஆண் தெய்வம்

2.பெண் தெய்வம்

ஆண் சிறுதெய்வங்கள் காவல் மற்றும் பாதுகாப்பிற்கு துணை நிற்கும் தெய்வம் என கூறப்படுகிறது. இவர்கள் அதிகம் மினியப்பன் என்ற பெயரிலேயே ஆண்தெய்வத்தை வைத்துள்ளனர்.

( உதாரணமாக)

1.இழுவரை முனியப்பன்

2.கருவறை மினியப்பன்

3.ஒண்டிமினியப்பன்

பெண்தெய்வம் தாயாக இருந்து தங்களின் பாதுகாப்பு,உணவு,அத்தியாவசியம் போன்றவற்றிற்கு உதவும் தெய்வம் எனக் கூறப்படுகிறது .

(உதாரணமாக )

1.பூந்தல் மாரியம்மன்

2.மயிலாடி மாரியம்மன்

3.மாகாளி அம்மன்

சிறு தெய்வ வழிபாடு இந்த வகையைச் சார்ந்தது. மேலும் தெய்வங்களே இவர்களின் வாழ்க்கைக்குத் துணை நிற்கின்றன என்று மக்களிடம் அழியாத நம்பிக்கை உண்டு.

சிறு தெய்வத்திற்கு இம்மக்கள் கூறும் பழமொழிகள்:

1.யாரு கடன் தீர்ந்தாலும் மாறி கடன் தீராது.

2.நம்புனவங்களுக்கு இவ மகராசன் நம்பாதவங்களுக்கு இவனை எமராசா.

3.குலதெய்வ வழிபாடு கோடி பலன் தரும்.

4.அரசன் அன்று கொள்வான் தெய்வம் நின்று கொள்ளும்.

5. குலதெய்வத்தை கும்பிட்டு கும்மியடி.

6.பொன்னான சாமியே ஒதுங்கி இருக்கு உன் சாமிக்கு பொங்கலும் கிடாவும் கேக்குதா.

7.ஊர் தெய்வம் உறவுக்காரன், சாதி தெய்வம் சனக்காரன், குலதெய்வம் குடும்பக்காரன்

பூந்தல் மாரியம்மன்:

பூந்தல் மாரியம்மன் என்பது பெண் சிறு தெய்வ வழிபாட்டில் தாய் தெய்வம் ஆகும். இந்த தெய்வத்தின் பெயர் காரணம் பூந்தல் அதாவது மலையில் பூக்களின் நடுவில் இருந்து மழை பெய்யும் போது எடுக்கப்பட்டதால் இப்பெயர். மேலும் பூ போல தாங்குபவள் என்றும் கூறப்படுகிறது.அதனால் தான் பூஞ்சோலையாக இருக்கும் இடமான ஊர் எல்லை முன் வைத்துள்ளோம் என்று இம்மக்கள் கூறுகின்றன.

இந்த தெய்வத்தை தாய் என்றும் எங்கு சென்றாலும் திரும்ப ஊர் வந்தாலும் அவர்கள் நிலையை இந்த தாயிடம் கூறி திருநீறு இட்டுச் செல்வார்கள். இந்த தாய் தனது வெற்றிக்கு துணை நிற்பால் என்று இம்மக்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர். சடங்கு முறைகளில் இந்த தாய்க்கு பலியிடுதல்,ஆணி செருப்பேருதல், சூறைக் கொடுத்தல் ,கோழி குத்துதல் போன்றவற்றை இந்த தெய்வத்திற்கு நிகழ்த்துகின்றன. இந்த தெய்வமானது மக்களின் தாய் என்பதால் தங்களின் கவலைகளை சொல்லி அழுது புலம்பி அது தீர வேண்டும் என்று கூறி செல்கிறார்கள்.

வழிபடும் முறை:

இம்மக்கள் திருவிழா காலத்தில் ஒரு மாதம் விரதம் இருப்பார்கள். பெண்கள் ரவிக்கை துணி அணிய மாட்டார்கள். வாரம் இரண்டு நாள் கோயில் சென்று தீபம் ஏற்றுவார்கள். திருவிழா அப்போது மூன்று நாள் அலங்காரம் செய்யப்படும். தெய்வத்திற்கு மாலை துலக்க மல்லியாக உள்ளது. தீர்த்த குடம் வீட்டிற்கு ஒருவர் எடுத்து வருவார்கள்.திருமண பூஜை நடைபெற்ற பின் மாங்கல்ய பூஜை நடைபெறும் இம்மக்களுக்கு மாங்கல்ய பாக்கியமும் மாங்கல்யம் நிலைக்க வேண்டும் என்று இச்சடங்கு முறை செய்யப்படுகிறது.கொடை என்ற பெயரில் சாமி ஊர்வலம் வரும்.வீட்டிற்கு தெய்வம் வரும்போது ஒரு குடம் தண்ணீர் ஊற்றி தேங்காய் பழம் உடைப்பது வழக்கம் தானிய பூஜைக்கு என்று இம்மக்கள் தானியங்களை வழங்குவதும் வழக்கம்.

விதிமுறைகள் அல்லது கட்டளைகள்

கோவிலில் பூ சாட்டிய பின் வெளியூர் சென்று தங்கக் கூடாது. வெளியூரிலிருந்து வரும் விருந்தினர் ஊரில் தங்கி தான் செல்ல வேண்டும்.வீட்டில் எண்ணெய் பண்டம் சமைக்க கூடாது.உறவுமுறை ஒத்திவைப்பு இருத்தல் வேண்டும். இறைச்சி உணவு உண்ணக்கூடாது

.வெளியில் உணவு அருந்துதல் கூடாது. நேர்த்திக்கடன் செய்பவர்கள் விரதம் இருத்தல் வேண்டும். காலனி அணியக்கூடாது.வீட்டில் சண்டை சச்சரவு இருத்தல் போடாது.

முடிவுரை

சிறுதெய்வங்கள் உலகின் தொன்மையானது மற்றும் இயற்கை முறையில் அமைந்தவை. நாட்டுப்புற செய்த தெய்வ வழிபாடு மக்களிடம் எல்லாம் நம்பிக்கை என்ற மூன்றாவது கை போன்றது. மேலும் அந்த சிறு தெய்வ வழிபாடு சடங்கு விதிமுறைகள் கட்டளைகள் போன்றவற்றையெல்லாம் இந்த ஆய்வில் நேரில் சென்று கேட்டு அறிந்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.இந்த சிறுதெய்வ வழிபாட்டின் மூலம் மக்களுக்கு நலம் பெறப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

துணைநூர் பட்டியல்:

1. நாட்டுப்புறவியல் ஓர் ஆய்வு – டாக்டர்.சு சக்திவேல். நாட்டுப்புறவியல் துறை. முதல் பதிப்பு ஜூன் 1983.

2. நாட்டுப்புறவியல் ஓர் ஆய்வு – முனைவர் சு.சண்முகசுந்தரம் .முதல் பாதிப்பு ஜனவரி 1975.